செ.கு.எண் : 54

நாள் 8.6.2008

## பத்திரிகைச் செய்தி

தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரிய ஊழியர் நலச்சங்கத்தினர் அகவிலைப்படி உயர்வு மற்றும் சில கோரிக்கைகள் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு இன்று (8.6.2008 ) உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். அவர்களின் கோரிக்கைகளை மாண்புமிகு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு கனிவுடன் பரிசீலித்து வருகிறது. இவ்வரசு பதவியேற்ற பின் அரசு ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதேபோன்று வாரிய பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

1. கடந்த ஆட்சிக்காலத்தில் வாரியத்தில் உபரி பணியாளர்கள் என கண்டறியப்பட்ட 862 பணியாளர்களில் முதற் கட்டமாக பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட 97 பணியாளர்களை இவ்வரசு மீண்டும் வாரியத்தில் பணியமர்த்தி ஆணை வழங்கியுள்ளது. மேலும் இதர உபரி பணியாளர்களை பணிநீக்கம் செய்யாமல் பிற துறைகளில் பணியமர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. அத்துடன் உபரி பணியாளர்களை வேறு துறைகளுக்கு மாறுதல் செய்யும்வரை அவர்களுக்கு செலவாகும் ஊதியத்திற்காக செலவு தொகையாக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.5.00 கோடி கூடுதல் மான்யமாக அரசு வழங்கி வருகிறது.

3. வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவை ஓய்வூதிய பயன்களுக்காக தொகை ரூ.5.18 கோடி மான்யமாக வழங்கியது.

4. இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் 105 பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

5. 466 பணியாளர்களுக்கு தேர்வுநிலை வழங்கப்பட்டுள்ளது.

6. வாரியப்பணியாளர்கள் / ஒய்வூதியர்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த 14 சதவீதம் அகவிலைப்படியை 1.7.2007 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

7. ஒய்வூதியர்களுக்கான ஆறாவது ஊதியக்குழு நிலுவைத் தொகை ரூ 2.35 கோடி வழங்கப்பட்டுள்ளது .

8. அரசு வாரியத்திற்கு வழங்கிவரும் நிகர ஈட்டு மான்யம் வாரியத்தின் தேவைக்கேற்ப உயர்த்தி வழங்கிட அரசின் பரிசீலனையில் உள்ளது.

9. வாரியப் பணியாளர்கள் /ஒய்வூதியர்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள 12 சதவீதம் அகவிலைப்படியை வழங்கிட வரியக்கூட்டத்தின் ஒப்புதல் வழங்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கதர்த் துறை அமைச்சர் 21/6/08
தலைமைச் செயலகம், சென்னை-600009

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

2/2